39

மே'84

50 காசு

மாத இதழ்

சுடுமுறை



FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

திருப்பதி தேவஸ்தான பாதாள பூஜை செய்யும் பட்டாச்சாரியாருக்கு என்ன வருமானம் கிடைக்கிறது தெரியுமா? வருடம் ஒன்றுக்கு ரூ 30 லட்சம்!

அவரது பரம்பரையைச் சேர்ந்த 4 முக்கியமான பட்டாச்சாரியார்களுக்கும் அவர்களது உதவியாளருக்கும் இத்தொகை வருடா வருடம் போய்ச் சேருகிறது.

(—கலைகண்டு : 24.11.83)

வேதத்தைக் கட்டிக்கொண்டு
நீங்களே அழுங்கள்!
சாதத்தை மட்டுமாவது
எங்களுக்குக் கொடுங்கள்

(—கவிஞர் மு. மேத்தா)

தமிழர் பிரச்சனையால் இந்திய இலங்கை போர் மூளும் அபாயம் ஏற்படுமா?

—இரணியல் ரோஜா, தூத்துக்குடி-6

போர் மூளுவது இலங்கைக்கும் இந்தியாவிற்கும அபாயம். ஆனால் மூட்டி விடுவது சில வல்லரசுகளுக்கு அவசியம். இந்த அவசிய அபாயம் தவிர்க்கப்பட்டாக வேண்டும்.

சமீபத்தில் உங்களை வியப்பிலாழ்த்திய நிகழ்ச்சி?

—எம். வடுகநாதன், வேதாரண்யம்

மாரட்டியத்தின் குடிகாரத்துணை முதல்வர் ராம்ராவ் அடிக், மோசமான நடத்தைக்குப் பின், எம்.எல்.சி தேர்தலில் பெரு வெற்றி பெற்றது.

இப்பொழுது நாளுக்கு ஒரு சினிமா பத்திரிகை வந்து கொண்டிருக்கிறதே. இது, பத்திரிகை வளர்ச்சியைக் குறிக்கிறதா?

—கே. ஜே. சோமசேகர், சென்னை-33

ஆபாசத்தைக் காசாக்கவே பெரும்பாலான சினிமா பத்திரிகைகள் வியாபாரம் நடத்துகின்றன. எப்படி இது ஆரோக்கியமான வளர்ச்சியைக் குறிக்கும்?

சட்டியார் பதில்!

ஆண்களுக்கே வேலையில்லாத இந்நாட்டில் பெண்களுக்கு ஏன் வேலை கொடுக்க வேண்டும்?

—ஸெல்வன், பம்பாய்-17

ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும், குறைந்தது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கிடைக்க வழி வேண்டும். இதில் பெண்ணுக்கு வேலை கிடைக்க நேரும்போது, ஆண் வீட்டு வேலையைக் கவனிப்பதில் என்ன தப்பு?

ஈழத்தில் தமிழனுக்கு இன்னும் நல்ல முடிவு கிடைக்கவில்லையே ஏன்?

கோ. பிரமநாயகம் இராதாபுரம்

தமிழர் பிரச்சனையத் தங்கள் சுய அரசியல் லாபத்துக்காக கூறுபோடும் சில தமிழக ஈழ அரசியல் தலைவர்களின் போக்கடாத்தனமே இந்தத் தாமதத்திற்குக் காரணம்.

இது முடியவில்லையே என்று தினறியதுண்டா?

—ஏ. புவனேந்திரன், திருவொற்றியூர்

சில்லறை தராமல் நியாயமான சிறு விஷயங்களைக் கூட அரசு அலுவலகங்களில் நிகழ்த்த முடியாத போது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net ,



நமது இலந்தைப்பழ மருத்துவம்

✷ இலந்தைப்பழத்தில் இருவகையுண்டல்லவா? உருவம் இரண்டானாலும் மருத்துவப்பண்புகளிலும், சத்துக்களிலும் இரண்டும் சிறந்தவையே.

✷ இலந்தைப்பழத்தில் 'க்ளூடாமிக்' அமிலம் உள்ளது. இது மூளையைச் சுறுசுறுப்பாக்கும். எனவே மூளை உழைப்பு செய்வோர்க்கெல்லாம் இலந்தைப்பழம் சிறந்த நண்பன்.

✷ ஆப்பிள் பழத்தில் இல்லாத வைட்டமின் A உயிர்சத்து இலந்தையில் நிறைய காணப்படுகிறது. நிறைய சுண்ணாம்பு சத்தும் இருக்கிறது. எனவே எலும்பு, பற்கள் உறுதி பெற அடிக்கடி இலந்தைப்பழம் சாப்பிடலாம்.

✷ வயிற்றுப்போக்கு, சீதளபேதி, கீல்வாயுப் பிடிப்பு, நீரிழிவு, மலச்சிக்கல், வேட்டை முதலியவற்றிற்கு இப்பழம் நல்ல மருந்து என்று நம் மருத்துவ நூல்கள் கூறுகின்றன

✷ உங்கள் வியர்வை நாறுகிறதா? உள்ளங்கால், அக்குள், உள்ளங்கை போன்ற இடங்களில் இலந்தை இலைகளை நசுக்கிப் பிழிந்து அந்தச் சாற்றை வியர்வை வரும் இடங்களில் தடவிக்காய விடுக. கொஞ்ச நேரத்திற்குப்பின் கழுவுக. வியர்வை நாற்றம் அழிந்தொழியும்.

✷ தொண்டைப்புண், ஈறுகளில் இரத்தப்பெருக்கு, வாய்ப்புண் இவற்றிற்கு இலந்தை இளந்தளிர்களை நீரில்போட்டு, உப்பைச் சேர்த்து கொதிக்க வைத்து கொப்பளித்தால் பலன் தெரியும்.

✷ முடி உதிர்கிறதா? சொட்டையாகிறதா? இலந்தை இலை சாற்றை தலைமயிரிலும், சொட்டை விழுந்த இடங்களிலும் தடவி வருக. விரைவில் முடி நன்கு வளரும்.

✷ இலந்தை இலைகளை கொதிக்கவைத்த நீரைக்கொண்டு இறந்தவர் சடலத்தை நீராட்டி, பெட்டிக்குள் கிடத்தினால், சடலம் சீக்கிரம் அழுகிக் கெடாது. பண்டைய எகிப்தியரின் முறை இது.

4 [அடுத்து : நமது பேரீச்சம்பழ மருத்துவம்]

சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இவ்வாறு அஞ்சி நடுங்கும் அளவுக்கு நகரங்களின் விலைவாசிநிலை ஏறிக்கொண்டிருக்கிறது. அண்மையில் டில்லி லோக் சபையில் வெளியிடப்பட்ட தகவல் நமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றன.

இதோ கீழே 8 நகரங்களில் சேகரிக்கப்பட்ட நுகர்வோர் குறியீட்டெண்கள் (CONSUMER PRICE INDEX). அதன் படி பங்களூர் மிகுந்த கிராக்கி உள்ள நகரமாக இருக்கிறது.

1.	பங்களூர்	— 625	குறியீட்டெண்
2.	பம்பாய்	— 569	,,
3.	சென்னை	— 562	,,
4.	டில்லி	— 561	,,
5.	ஹைதராபாத்	— 558	,,
6.	அகமதாபாத்	— 557	,,
8.	கான்பூர்	— 536	,,
7.	கல்கத்தா	— 525	,,

அரசாங்கம் தன் அலுவலர்களுக்கு குறியீட்டெண் களுக்கேற்ப பஞ்சப்படியை உயர்த்தி விடுகின்றது பொதுமக்களுக்கு...

—கபா

சோவியத் விண்கலத்தின் முதல் இந்தியர்கள் யார்?

✷ ராகேஷ் சர்மாவும், மால்ஹோத்ராவும் தான் சோவியத் விண்கலமான சோயூஸ் இல் நுழைந்த முதல் இந்தியர்கள் இல்லை. ஏற்கனவே இரு இந்தியர்கள் இந்த விண்கலத்திற்கு அறிமுகமானவர்கள். யார்? வேறு யாராக இருக்க முடியும்! இந்திராவின் பிள்ளைகளாகிய சஞ்சய், ராஜீவ் தான். 1976இல் சஞ்சய்யும், 1982இல் ராஜீவும் இக்கலத்தில் நுழைந்து பார்க்க அழைத்துச் செல்லப்பட்டனர். ரஷ்யா வின் நட்சத்திர நகரத்தில் உள்ள விண்வெளி பயிற்சிக் கூட்டத்தின் கமாண்டரான ஜெனரல் ஜியார்ஜி பெர்சி கோரய் ராஜீவ் விண்வெளி வீரர் பயிற்சிக்கு உகந்தவர் என மொழிந்து இருக்கிறார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

'சுட்டி' வாசகர்களுக்கு
'மாருதி' நூல்கள்

	ரூ.பை
A S. மூர்த்தி. M.A.,B.L. & K. வெங்கட்ராவ்	
மனோசக்தி	20.00
குடும்பத் திட்டம்	5.00
'குருஜி' தபஸ்யோகி C.K.S.	
யோகமும் போகமும்	
(குண்டலினி யோகம்-படங்களுடன்)	15.00
புலியூர்க் கேசிகன்	
தீர்க்கதரிசி பாரதியார்	3.50
K. வெங்கட்ராவ்	
குடும்ப நலம்	5.00
தாயும் சேயும்	5.00
பெண்மை	6.00
இல்லற இன்பம்	15.00
விக்கிரவாண்டி வி. ரவிச்சந்திரன்	
மலைக்க வைக்கும் மனித ஆற்றல்கள்	8.00
பூமிக்கு வந்த வானமண்டல மனிதர்கள்	10.00
அறிவுக்கு அப்பாற்பட்ட அதிசய சக்திகள்	15.00
பறக்கும் தட்டுகள்?!	விரைவில் வருகிறது

கடிதம் எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பி வைக்கின்றோம். தபால் செலவு தனி.

மாருதி பதிப்பகம்
173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இராணுவத்தில்

மதகுருக்கள்

மத உணர்வை, சாதக மாக நம் தரைப் படை நிர்வாகம்தூண்டி விடுவதற்கு இதோ இப்புகைப்படம் அத்தாட்சி. புதிதாகப் பயிற்சி பெறப்போகும் இளம்படை வீரர்களுக்கு இந்து மதக் குருக்கள் சாஸ்திரிய முறைப் படி நம்பிக்கைப் பிரமாணம் செய்து வைக்கிறார். மத நம்பிக்கைகளைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பிரிட்டிஷ் தந்திரத்தின் வழியிலேயே இன்னும் நம் இராணுவத்தினர் செயல்பட்டு வருகின்றனர். 'பண்டிட்' எனப்படும் இந்த மதக் குருக்கள் தரைப்படை ஜே. சி. ஓ. பதவி தரப்பட்டு சீருடையும் அணிகின்றனர். ஒவ்வொரு தரைப்படை பிரிவி-லும் மந்திர் எனப்படும் கோயில்கள் அமைக்கப்பட்டு ஜவான் களின் சம்பளத்திலிருந்து கட்டாயமாக, கோயில் நிதி வசூலிக்கப்படுகிறது. அடிக்கடி படைவீரர்கள் இந்த வழிபாடு செலுத்த கோவிலுக்கு அணிவகுத்து அழைத்துச் செல்லப் படுகின்றனர். வேறு மதத்தைச் சேர்ந்தவராயினும். மத நம்பிக்கையில் லாதவராயினும் வலுக்கட்டாயமாக இந்த மதச்சம்பிரதாயங்கள் திணிக்கப்படுகின்றன. மதச்சார் பற்ற நாடு என்று அரசியல் நிர்ணயச் சட்டத்தில் குறிப் பிட்டுள்ள விதியை நம் தரைபபடை நிர்வாகம் குப்பைக் கூடையில் எறிந்து வருகிறது.

விமானப் படையிலோ, கடற்படையிலோ இல்லாத இந்த மாதிரி மதத்திணிப்பு, கட்டுப்பாட்டு முறைகள், தரைப் படையில் மட்டும் தலைவிரித்து ஆடுவது ஏனோ?

FREE E- BOOKS , www.thamizham.net.,

அந்த பஸ் ஆண்டிப்பட்டியைத் தாண்டி விரைந்து கொண்டிருந்தது.

சாமியார் மடம் ஸ்டாப்பில் நின்றது. இரண்டு பேர் இறங்கவும் விசில் கொடுத்தார் கண்டக்டர். பஸ் மெதுவாக நகர ஆரம்பித்ததும் ஒரு பத்து வயதுச் சிறுமி ஓடிவந்து தொற்றிக் கொண்டாள்.

அவள் ஒரு பிச்சைக்காரி. தலை எண்ணெய் பசையேதும் இல்லாது பரட்டையாய்க் கலைந்து இருந்தது. அதில் ஒரு புறம் ரோஜா நூல் குஞ்சத்தால் ஒரு சடைவேறு பின்னியிருந்தாள். யாரோ சக்கையாய் உபயோகித்து பின்னர் பகட்டு இழுமாகக் கொடுத்த கிழிந்த பாவாடையும், எண்ணெய் பிசுக்கு, அழுக்குப்பரவல்கள் நிரம்பிய சட்டையும் உடுத்தியிருந்தாள்.

முதல் முறை

சிறுகதை

எல்லோரது பார்வையும் அவள் பக்கம் திரும்பியது. சிலர் தங்கள் முகத்தைச் சுளித்தவாறு திருப்பிக்கொண்டனர். அவளோ விரையும் பஸ்ஸின் குலுங்கல்களுக்கு 'பாலன்ஸ்' பண்ணி நிற்கத் தெரியாமல் தடுமாறினாள். இருபுறமுள்ள சீட்டுகளை பற்றியவாறு தவித்தாள்.

"ஏய் புள்ளே... எங்க போகணும்?" —கண்டக்டர்.

"சாரே... கா மருதைக்கு போகணும்?" —அவள்.

"ரூவா வைச்சுருக்கியா?..."

"துட்டுக் கொடுத்துடுறேன்... என்னக் கொண்டுபோயி மருதைல்ல விட்டுருங்க. இப்பத்தான் மொதத் தடவையாப் போறேஞ் சாரு..." என்று சொல்லிக் கொண்டே பாவாடையில் முடிந்து வைத்திருந்த காசை எடுக்க முயன்றபோது, டிரைவர் போட்ட 'சடென் பிரேக்'கால் தடாலென்று கண்டக்டர் மீது மோதினாள்.

அப்போதுங்கூட அவளை ஒரு இடத்தில்உட்காரச் சொல்லாமல், "கர்மம்...கர்மம்... ஏன்தான் இந்தப் பீடைகளெல்லாம் ஏறிக் கழுத்தை அறுக்குதுங்களோ... பேசாம கள்ள ரெயிலு ஏறிப் போக வேண்டியது தானே..."

"சாரே... கள்ளரெயிலுல ஏறாதேன்னு அப்புச்சி சொல்லிக் கொடுத்துருக்காரு கள்ளத்தனமாப் போனா போலீஸ்-க் காரவுக புடுச்சி ஜெயிலுல பூட்டுடுவாங்க... கா மருதைக்கு போயி எங்க அம்மாச் சியைப் பாக்க வேண்டாம்?..."

8. கண்டக்டர் அவளிடம் நாலேகால் ரூபாய் சில்லரையை

FREE E- BOOKS , www.thamizham.net.,

வாங்கிக்கொண்டு, ''டிக்கட் கொஞ்ச நேரங்கழிச்சு தர்றேன்'' என்றவாறு நகர்ந்தார்.

பஸ் S வளைவு ஒன்றில் விரைந்து திரும்பியபோது, அவள் நிலை தடுமாறி வெள்ளை வெளேர் டிப்டாப் ஆசாமி மீது விழுந்தாள்.

அவன் பயங்கரமாய் சப்தமிட்டு அவளைத் திட்டினான்.

''கண்டக்டர் சார்... இங்க பாருங்க அந்த அசிங்கப் பிண்டம் அலம்பு கோலப் படுத்துது...'' —என்றார் ஒரு ஜிப்பாக் காரர்.

''சார்... காங்க வேணும்னா இறங்கி அடுத்த பஸ்ஸிலவர்றோம்...'' என்று சில நாகரிகங்கள் பலகுரலில் மொத்தமாய் ஒலிக்க... கண்டக்டர் அவர்களைச் சமாதானப் படுத்தினார்.

ஆள் அரவமில்லாத சாலையில் பஸ் வேகித்துக்கொண்டிருந்தது.

கண்டக்டர் 'உய்ய்' என விசில் கொடுத்ததும், பஸ் குலுங்கி நின்றது.

''ஏய் புள்ளே... ஒன்னைத்தான் கீழ இறங்கு மருதை வந்திடுச்சு...'' —என்று பவ்வியமாய்ப் பொய் சொல்லி அவளை இறக்கிவிட்டான்.

பஸ்ஸில் ''இதான் சரி...'' என்று மனிதப்போர்வையில் இருக்கும் கொள்ளிவாய்கள் ஏளனங்களாய் சிரித்தன.

அவர்களின் சந்தோஷங்கள் அவனைக் குத்திட்டிகளாய் குத்தின. இருந்தாலும், அந்த அநாகரிகங்களின் கூட்டத்தை அல்லவா கண்டக்டர் சமாதானப்படுத்தவேண்டியிருந்தது

பிச்சைக்காரியோ, தலையைச் சொறிந்தவாறு பேந்தப் பேந்த விழித்தவாறு நின்றிருந்தாள்

அவளை விட்டு அந்த பஸ் அகன்றது

நமது நாகரிகம் பின்னோக்கி பீடு நடைபோடுகிறது!

—K பாலசந்தர்

எழுத்துலகின் புரட்சித் திலகம்
மெர்வின் எழுதிய

தினகரன் ஒரு கொள்ளைக்காரர்	1.00
இயேசு வரமாட்டார்	4.80
பணக்காரராக வழிகள்	8.00
பிறந்தது வாழ்வதற்கே	8.00
உழைப்பால் உயர்ந்த ஜி.டி நாயுடு	9.00

நூல் விலையுடன் அஞ்சல் செலவுக்கென 50 காசு சேர்த்து அனுப்புக. பாலன் சகோதரர்கள்,
புழல் (அஞ்) சென்னை-600 066.

FREE E-BOOKS , www.thamizham.net.,

சிந்தனை : (உழைக்கும் மகளிர் மாத ஏடு) ஆசிரியர்: J. விஜயாள் AE 113, 10.வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை.40. தனியிதழ் விலை : 40 காசுகள்

உழவன் உரிமை : (தமிழ் நாடு விவசாயிகள் சங்க மாத ஏடு) ஆசிரியர் : கே. வீரய்யன், எஸ் 16, அரசினர் தோட்டம் சென்னை.2. தனியிதழ் விலை : 50 காசுகள்

Bank Worker's Unity : (வங்கி ஊழியர் திங்களிதழ்) ஆசிரியர் : S. R சேகர், 3, தீபுரம் முதல் தெரு, சென்னை.600 014. ஆண்டு சந்தா : ரூ. 10.00

போக்குவரத்து தொழிலாளி : (மாத இதழ்) ஆசிரியர் : கே எம். அரிபட், 52, சுங்கம் சாலை, சென்னை.600 012. ஆண்டு சந்தா : ரூ. 6.00. தனிப்பிரதி : 50 காசு

மீன் கதிர் : (தமிழ் நாடு மீன் தொழிலாளர் மத்திய அமைப்பின் திங்களிதழ்) ஆசிரியர் : து. ஜானகிராமன் 44, சுபேதார் ஹரன் சேன் தெரு, சென்னை.14 தனியிதழ் விலை : ரூ 1.00.

சி ஐ டி யு செய்தி : (சி ஐ டி யு தமிழ் மாநிலக் குழு வெளியீடு) ஆசிரியர் : ஆர். உமாநாத் வி.பி.சிந்தன் பிளாக் அரசினர் தோட்டம், சென்னை.2 தனியிதழ் விலை : 50 காசுகள்.

The Voice of the working women : (Bi-monthly Journal) Editor : Vimal Ranadive. 6, Talkataa Road. New Delhi-110001. Yearly subscription : Rs 6-00 Price of single issue : 1-00.

பாரதி சோலை : (நல்வாழ்வு மற்றும் சமூக மேம்பாட்டு மாத இதழ்) ஆசிரியர் : ஆர். டி. ராஜன், கோவை, காட்பாடி.632 007. ஆண்டு சந்தா : ரூ 12.00. தனியிதழ் : ரூ 1.00

தேசிய ஜனநாயகப் புரட்சியும் பொதுவுடைமைப் புரட்சியாளர்களும் : பம்பாய் பகுப்பாய்வுக் கழகத்தின் தீர்மானங்களும், விளக்கமும். தமிழில் மொழிபெயர்த்தவர் K. பால்ராஜ். தொடர்பு முகவரி : K. பால்ராஜ், 56.3 2-வது தெரு, வ. உ. சி. நகர், கோவில் பட்டி. விலை : ரூ 2.00.

நூற்றுக் கணக்கான புத்தகம், பத்திரிகைகள் மற்றும் தபால் வழித் தொழில் நுட்பப் பயிற்சியை இலவசமாக பெற விரும்புகிறீர்களா?
விபரங்களுக்கு எழுதவும் :
மயூரா பப்ளிகேஷன்ஸ்
10 ஞானப்பிரகாசம் வீதி
சிதம்பரம் 608 001.

FREE E- BOOKS , www.thamizham.net.,

எச்சில் பயணச்சீட்டுக்கு மாற்று வழி

''சென்ற இதழில் (சுட்டி மார்ச் 84) தங்களின் ''எச்சில் பயணச்சீட்டுகள்'' படித்தேன். எச்சில் தொடுவதனால் எவ்வளவு தீமை என்று நடத்துனர்களாகிய எங்களுக்கும் தெரிந்ததே. இதற்கு ஏதாவது கண்டுபிடிக்க வேண்டும் என நீங்கள் சொன்னதிலிருந்து அது என் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. இதற்குப் போய் விஞ்ஞானியைத் தேடிப் பிடிக்க வேண்டியது இல்லை. ஏன் எங்களுக்கு ஐடியா தெரியாதா? ஒரு சிறு டியூபை எடுத்துக் கொண்டு அதற்குள் 'ஸ்பான்ஜை' திணித்துக் கொண்டு நடத்துனர் களின் பணப்பையின் முன் பக்கவாட்டில் சிறு ரெக்சினை எடுத்து, டியூபை உள்ளே வைத்து ரெக்சினால் கவர் செய்த மாதிரி பணப்பையின் முன்புற அகலப்பகுதியில் வைத்து 'ஸ்பான்சில்' தண்ணீர் நனையும் அளவிற்கு ஊற்றினால் போதும், மிகவும் சௌகரியமாக உள்ளது. நான் அப்படித் தான் செய்துள்ளேன். செய்யத் தூண்டியது சுட்டி. சுட்டிக்கு நன்றி.'' —க. இராசமாணிக்கம், ப. எண் : 7046, சேரன் போக்குவரத்துக் கழகம், திருப்பூர் கிளை



FREE E- BOOKS , www.thamizham.net.,

"சர்வீஸ் கமிஷன்" கொஞ்சம் கவனிக்கலாமே!

இப்போதெல்லாம் நடுத்தரக் குடும்பங்களில் படித்து முடித்து வீட்டில் இருக்கும் பிள்ளைகளின் வேலைதேடும் பரீட்சைகளுக்குப் பணம் ஒதுக்குவது மாதாந்திர வீட்டு பட்ஜெட்டில் ஒரு முக்கிய அம்சமாகி விட்டது.

ஆனால், அந்தோ பரிதாபம்! சிலநேரங்களில் 3 தேர்வுகள் ஒரே நாளில் நடத்தப்படுகிறது. மூன்று தேர்வுக்கும் விண்ணப்பித்த வேலையில்லா இளைஞர் ஒருவர், ஒரே ஒரு தேர்வுக்கு மட்டுமே செல்ல வேண்டி நேர்கிறது. இவைகளை விண்ணப்பிக்கச்செலவழித்த பணம், நேரம் அனைத்தும் வீணாவதோடு, மற்ற இரண்டு பரீட்சைகளுகு போட்டியிட கூடிய வாய்ப்பினையும் அவர் இழக்க வேண்டி வருவது ஒரு பெரிய விஷயமாகும். 1984, பிப்ரவரி 26ம் தேதி அன்று இரயில்வே சர்வீஸ் கமிஷன், பெடரல் பேங்க பரீட்சை மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகள் தேர்வு (BSRB. P.O. Exam) ஆகிய மூன்று தேர்வுகளும் ஒரே நாளில் வர, இதனால் நஷ்டப்பட்ட மாணவர்கள் ஏராளம். விண்ணப்பம், போட்டோ என்று பணநஷ்டம் ஒரு பக்கம் இருந்தாலும் வாய்ப்பு தவறுவது மிகப்பெரிய இழப்பாகிறது. இதைப்போலவே கடந்த ஆண்டுகளில் பல தேர்வுகள் ஒரேநாளில் நடத்தப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு! தேர்வு நடத்தும் இந்த அமைப்புகளில் பல சுயாட்சி பெற்ற தனி நிறுவனங்களாக இருப்பதால்,

இவைகள் ஒன்றினை ஒன்று அனுசரித்து வெவ் வேறு தேதிகளில் பரீட்சை வைக்க தெரியாமல், ஒரே நாளில் தன்னிச்சையாகதேர்வு வைத்து வேலையில்லாத இளைஞர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறார்கள். மாற்று :-

1. ஒவ்வொரு தேர்வாணைக்குழுவும், விண்ணப்பத்தாரர்களைத் தேர்வுக்கு அழைக்கும் விளம்பரத்திலேயே தேர்வு நடைபெறும் நாளைகண்டிப்பாகக்குறிப்பிட வேண்டும். (TNPSC இப்படி செய்வதில்லை.)
2. அப்படிக் குறிப்பிடும் அதேநாளில் வேறு எந்தத் தேர்வாணைக்குழுவும் தேர்வு நடத்தவில்லை என்பதை

FREE E- BOOKS , www.thamizham.net.,

புதுவாத்தியார் [redacted] கூற்று: **தோசையம்மா தோசை**

தோசையம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசிமாவும்,
உளுந்துமாவும்
கலந்து சுட்ட தோசை
அப்பாவுக்கு அஞ்சு
அம்மாவுக்கு நாலு
அண்ணனுக்கு மூணு
அக்காவுக்கு ரெண்டு
பாப்பாவுக்கு
ஒண்ணு
சுடச்சுடத் தோசை
திங்கத் திங்க ஆசை
இன்னும் கேட்டா பூசை

இப்பாடம் என்ன நவிலகிறதோவெனில், வறுமை நவிலகிறது. வரகுத் தோசையும், கம்பங்கூழுமே அறிந்த ஏழைக்குழந்தை தீபாவளிக்குத் தீபாவளி உளுந்தமாவுத் தோசை கண்ட சுவையில் பிறந்த பாடலிது.

அரிசிமாவும், உளுந்தமாவும் கலந்து சுட்ட தோசை நயத்தை குழந்தை விதந்தோதுகிறது.

இறுதி இரண்டடிகளில் தாய் குழந்தைக்குத் தோசை மறுப்பது சுட்டப்படுகிறது. இது இல்லாமை காரணமாகவே எனச்சொன்னால், வளமான தமிழ்நாட்டின் பெயருக்கு களங்கம் கற்பிக்க திரித்து பொருள் காண்பதாக சிலர் கூறுவர். 'இலக்கிய நயம்' உணராதார் கூற்று என்பர் தோசை நயத்திலும் ஒசை நயம் சிறந்திருப்பதை உணராதவர் இவர் என்று சாடுவர்.

கம்பங்காட்டில், உழவு கட்டியில் அலைந்து வருகிற குழந்தைக்கு ஒசை நயத்தைவிட தோசை நயமே சிறந்திருக்கிறது என்பதை உணர்க.

—நன்றி : 'வால்'

உறுதி செய்து கொண்ட பின்னரே விளம்பரப்படுத்த வேண்டும்.

3. இவைகளைக் கண்காணித்து ஒழுங்குபடுத்த அரசு தனி அமைப்பை உண்டாக்க வேண்டும்.

வேலை தேடும் இளைஞர்களின் மனசை வருத்தி எரிக்கும் இந்த விஷயம் குறித்து மத்திய மாநில அரசுகள் உடனே கவனிக்குமா?

—சுரேந்திரன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

காது நன்றாகக் கேட்கவேண்டுமா?

காது மந்தத்தன்மை மிகவும் மோசமாகும் வரை காத்திருக்காதீர்கள். நாங்கள உதவி செய்ய காத்திருக்கிறோம்.

இயர் எய்ட்ஸ்

4, வடக்கு உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-600 017.

"ஆஸ்துமா - சஸ்லேபிலியா" — பற்றி அனைவரும் அறிந்திட!

ஆஸ்துமா எவ்வாறு ஏற்படுகிறது? நம் உடலிலுள்ள நெற்றுக்களை (சிறுநீரகம்) சுற்றி நீரைப் பிரித்து வெளியேற்றுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததொன்றாகும். சிறுநீரகங்களில் நெற்றுக்களில் வடிகட்டும் பகுதியில் உப்பு, பழங்கள் பழுதடைதல், மதுபோதை அடைப்பு ஏற்படுகிறதா, உணவுமை, சிறுநீரகம் நீரை மாற்றுதல் உடலில் ஏற்படும் குளிர்ந்த தன்மையால் வருகிறதா, சிறுநீர் முறையாக முழுமையும் இறக்கத்திலிருந்து பிரிக்கப்பட முடியாமல் இரத்தத்திலேயே தங்கி விடுகிறது. இச் சிறுநீர் கலந்த இரத்தம் மறுபடியும் மார்பு பகுதியில் உள்ள நுரையீரலில் சுத்தப்படுத்தப் படுகிறது. சுத்தப்படுத்தப்படுகிறபோது பிரிக்கப்படும் சிறுநீர் துர்நாற்றம் மூலம் மூக்கில் நீர் கலந்து வெளியேறுகிறது. இந்நீர் இறுதி முக்கியப்பகுதி ஏற்படுகிறது. மூக்கு சிந்தும்போது இது மூக்குச்சளியாக வெளியேறுகிறது. இறுதியாக சிறுநீர் இருமலின் போது கோழையாக வெளியாகிறது. இம்முறைகளில் வெளியேற்றப்படாத சிறுநீர் சிறுநீர் நுரையீரல் பகுதியில் படிந்து விடும் காரணமாகிறது. இதன் காரணமாகவே, தொடர்ந்து ஜலதோஷம், மூக்கடைப்பு, மூக்கில் நீர்வடிதல், தும்மல், இருமல், காய்ச்சல், சைனஸ் (Sinus) மூக்கு வளர்ந்து போன்றவை ஏற்படுகின்றன. இத்தகையோர் அனைவரும் ஆஸ்துமாவிற்கோ - சஸ்லேபிலியாவிற்கோ தொடர்புகொள்ளலாம் ஆலோசனை மையம் கொள்ளலாம்.

ஆஸ்துமா - சஸ்லேபிலியா-வை குணப்படுத்தும் முறை என்ன? நெற்றுக்களில் (Kidneys) நீரை செலவழித்து செயல்பட, பக்க விளைவு ஏற்படுத்தாத தக்க முறைகளை மருந்தை உட்கொள்ள வேண்டும். நெற்றுக்களில் உள்ள வடிகட்டும் நுண்ணிய நரம்புகளை விரைவில் சரிசெய்ய, மிகவும் அவசியமான சிறப்பு (Souna Bath - with Herbal Oil) முறையை செய்து கொள்ளவேண்டும்

முகவரி: சித்தமருத்துவ - ஆராய்ச்சி வைத்தியர்.

Dr. C. K. மாணிக்கவாசகம்,
செங்கற்பட்டு P. O. (N. A. Dt.) 636653

படைப்புகளை அனுப்புவோர்:

தயவு செய்து பிரதி எடுத்துக் கொண்டு அனுப்புக. வெளியிடாதவற்றைத் திருப்பி அனுப்ப அஞ்சல் தலைகள் இணைக்க வேண்டாம். வெளியிடப்பட்டால் மட்டும் அறிவிக்கப்படும். கட்டுரையின் அளவையும், கூர்மையையும் மனதில் வைத்து சுருக்கமாக எழுதி அனுப்புக. வெளியிட முடியாவிட்டாலும் மனம் சோர்ந்து போகாதவர்களாக படைப்பாளர்கள் இருக்க வேண்டும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

வாயில் புகையிலை போடலாமா?

கூடாது. புகையிலையை எந்த வடிவத்தில் உட் கொண்டாலும் தீங்குபயப்பதே. W. H. O. என்னும் உலக சுகாதார நிறுவனம் (ஐ. நா.வின் கிளை) "புகையிலையை உலகத்தை விட்டே ஒழித்தாக வேண்டும்" என்று விஞ்ஞானி களைக் கொண்டு முடிவு செய்து விட்டது. இதை அறிந்தும் அரசாங்கம் புகையிலை சாகுபடிக்குப் பொருள் கடன் கொடுத்து மேலும் வசதி செய்து கொடுக்கின்றதே இது சரியா?

புகை குடிப்பதைப் போலவே புகையிலை வாயில் போட்டுக் குழப்புவதும் தீயது என்றால் புகையிலைப் பாக்கட்டுகளிலும் நிகோடினின் கெடுதலை அறிவுறுத்தும் வண்ணம் உன் அச்சிடுவதில்லை?

தாம்பூலத்தோடு வாயில் புகையிலை போடுவதால் முதலில் வாயின் உட்புறச் சுவர்களில் வெண்புள்ளிகள் (LEVKOPLAKIA) தோன்றுகின்றன. பின்னர் அவையே வாய்ப்புற்று நோயாக (ORAL CANCER) உருவெடுக்-கின்றன.

வெற்றிலைபாக்குடன் புகையிலை மெல்லுகிறவர்கள், வாயில் தேக்கி வைத்திருந்து பின் கண்ட கண்ட இடங்களில் துப்புகிறார்கள்.

உணவு சீரணிப்பதற்கும் தொண்டைவறட்சி இல்லாமல் நைப்பாக இருப்பதற்கும் இயற்கையாகவே வாயிலிருந்து எச்சில் அவ்வப்போது உள்ளே போய்க் கொண்டிருக்கிறது. புகையிலை போடுவதால் அது தடைப்பட்டுப் போகிறது. சீரணித்தலுக்கு உதவும் எச்சில் இரைப்பைக்கு அவ்வப் போது போகாததினால் சீரணித்தல் கெட்டுப் போகிறது.

உண்ட உணவு கல்லுப்போல வயிற்றில் அப்படியே இருக்கும். தொடர் புகையிலைத் தாம்பூலம் போடுவதால் ஏராளமான பொருட் செலவு ஆகின்றது.

எனவே வெற்றிலை பாக்குடன் புகையிலை போடுவதை அறவே ஒழித்தல் நல்லது.

— சுட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

பாதிபேர்தான் சாவார்களா

அமெரிக்க அரசின் அணு ஆயுதக் குவிப்புக்கு அமெரிக்க மக்களே கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களைச்சாந்த படுத்த அமெரிக்க அரசு ஆய்வு அறிக்கை என்ற பெயரில் சில தகவல்களை வெளியிட்டிருக்கிறது

"அணு ஆயுத யுத்தம் ஏற்பட்டால் கூட, அமெரிக்க மக்களில் பாதிப்பேர் தான் சாவார்கள். மற்றவர்கள் உயிர் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். அப்படி உயிர் தப்புகிறவர்களுக்குப் புலால் உணவு வகைகள் தாராளமாகக் கிடைக்கும்."

இந்த சுவு இரக்கமற்ற ஆய்வு அறிக்கையை வெளியிட்டது "நெருக்கடி கால அமெரிக்க ஸ்தாபனம் என்ற அரசு நிறுவனம் தான். இந்நிறுவனம், அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனின் நேரடி கண்காணிப்பில் இயங்குவதாகும்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கூட அமெரிக்கா, அணு ஆயுதங்களைக் குவித்து வைத்திருக்கிறது அல்லவா? இதற்காக ஐரோப்பிய மக்களுக்கும் ஆறுதல் வார்த்தை சொல்லி இருக்கிறார்கள். எப்படி?

"அமெரிக்காவை விட ஐரோப்பாவில் சாவு எண்ணிக்கை கொஞ்சம் கூடுதலாக இருக்கும் அவ்வளவு தான். எல்லோருமே செத்து மடிந்து போக நேரிடும் என்று நினைப்பது சுத்தத் தவறு. இன்னொன்று, அணு யுத்தம் மூண்டால், ஆடு மாடு போன்ற கால்நடைகள் மனிதர்களை விட தாக்குப் பிடித்து, உயிர் பிழைத்துக் கொள்ளும். ஆகையால், மனிதர்களில் செத்தவர்கள் போக மிச்சம் உள்ளவர்களுக்கு ஆட்டு மாட்டு இறைச்சி தாராளமாகக் கிடைக்கும். இது போன்ற நன்மைகள் உண்டு என்பதையும் மறந்து விடக்கூடாது."

FREE E-BOOKS, www.thamizham.net.,

சினிமா தலைப்புகள் சிந்திக்க வைக்குமா?

தூங்காதே தம்பி தூங்காதே

தூங்காதே தம்பி
தூங்காதே
துடையில்
கயிறு திரித்து விடுவார்கள்?

பாயும் புலி

வருமான வரி
கட்டச் சொன்னால்
திரையில் பாயும்புலிகள்
திண்ணையில் பதுங்கும்!

விடியும்வரை காத்திரு

ரேஷன் கடை
பஸ் ஸ்டாண்ட்
அரசு அலுவலகங்களில்

சகலகலாவல்லவன்

சகலகலாவல்லவன்
"சாம்பார் தான்"
இட்டிலிக்கும்
தோசைக்கும்
பூரிக்கும்
சோறுக்கும்
எல்லாவற்றுக்கும்
ஈடு கொடுக்கும்.

வறுமையின் நிறம் சிவப்பு

வறுமையின்
நிறமல்ல சிவப்பு
வறுமையை
எதிர்த்துப் போராடியவர்கள்
சிந்திய ரத்தமே சிவப்பு!

அன்னை ஓர் ஆலயம்

அன்னைகளுக்கு
ஆலயம்
அடுப்படி தான்!

இது எமக்கு வந்த தூலிலிருந்து :—
சினிமா பெயர்களின் தலைப்பில் சிறு கிண்டல் கவிதைகள் :
K. ராஜாங்கம், அழகர் பீடா ஸ்டா , ரவுண்டானா, துப்பாக்கித் தொழிற்சாலை, திருச்சி-16, விலை : 50காசு.

FREE E- BOOKS , www.thamizham.net.,

வாசகர் முழுமுயற்சி

ரேஷன் கடையில் புகார் புத்தகம் கிடையாதா?

எங்கள் அகத்தியன் பள்ளியில் 'அமுதம்' அங்காடி உள்ளது. டிசம்பர் மாதம் இங்கு மழையால் பாதிக்கப்பட்டதால் வழக்கமாக வழங்கப்பட்ட 6 கிலோ அரிசிக்கு மேல் 3 கிலோ கூடுதலாக வழங்கப்பட்டது. ஆனால் ஜனவரி மாதத்தில் வழக்கமான 6 கிலோ அரிசியைக் குறைத்து 3 கிலோ தான் கொடுப்போம் என்றார்கள். பாதிக்கப்பட்டதால் தானே 3 கிலோ அதிகப்படி கொடுத்தீர்கள். இப்போது வழக்கம் போல தாருங்கள் என்றதற்கு "அதற்கு எங்களுக்கு ஆர்டர் இல்லை" என்றார்கள். நான் இந்தக் குறையைப் புகார் புத்தகத்தில் எழுதி வைத்து விட்டுப் போகிறேன் என்றேன். "புகார் புத்தகமா? அப்படி ஒரு நோட்டு எங்களிடம் இல்லை" என்றார்கள். ஏழை எளிய மக்கள் தங்கள் மனக்குறைகளை உடனுக்குடன் வெளியிட, நியாயம் கேட்க புகார் புத்தகத்தை சட்டபடி வைக்க வேண்டுமா, இல்லையா என்பதைப் பற்றி சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?

—வீ. தம்பித் தமிழ், அகத்தியன் பள்ளி, வேதாரண்யம் வட்டம்

பாறை உடைப்பு பிரச்சனை :

திருப்பூர் வடக்கு கொங்கு மெயின்ரோடு முடிவில் உள்ள பாறைக் குழியைக் குத்தகைக் காரர்கள் உடைத்துக் கல்லெடுக்கிறார்கள். பேருந்து போக்குவரத்து நடைபெற்று கொண்டிருக்கும் முக்கியமான அவ்வழியில் கஞ்சம் பாளையம், சின்னப் பொம்ம நாயக்கன் பாளையம், நல்லாத்துப்பாளையம், பாரத் நகர் போன்ற கிராமங்களுக்கு செல்லும் பாதசாரிகளும் வண்டி வாகனங்களும் சொல்லொன்னா அவதிப் படுகிறார்கள். அருகாமையில் அமைந்து உள்ள பாரத் நகர் குடியிருப்புகளின் மேல் கற்கள் விழுந்து அங்குள்ளோர்க்குப் பெரும் இடையூறாக உள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை விண்ணப்பித்தாயிற்று. எந்தப் பயனும் இல்லை. எப்போது தான் அதிகாரிகள் கவனம் அந்தப்பாறை பக்கம் திரும்பி மக்கள் படும் வேதனை தீரப்போகிறதோ?

—கோவிந்தசாமி. தலைவர் : இளைஞர் நற்பணி மன்றம், கஞ்சம்பாளையம்,

FREE E- BOOKS , www.thamizham.net.,

எக்ஸ்ரே யூனிட்டுகளிலும் "பகல் கொள்ளை"

"ஏன் சார், இந்த இடத்துக்கா போனீங்க? உங்களை 'சுந்தர் எக்ஸ்ரே யூனிட்'டுக்குல்ல நான் போகச் சொன்னேன்?"

மாலை நேரங்களில் தனிப்பட்ட க்ளினிக் வைத்து நடத்தும் நூற்றுக்கணக்கான டாக்டர்கள் நம்மிடம் இப்படிக் கூறும்போது நாம் சுதாரித்துக் கொள்ள வேண்டும். என்ன? என்று கேட்கிறீர்களா? நீங்கள் படித்தவர் தானே! உங்கள் எக்ஸ்ரே ரிப்போர்ட்டைப் பாருங்கள்.

எல்லாமே 'நார்மல்' 'க்ளீன்' என்பது போன்ற வார்த்தைகள் அடங்கியதாக இருக்கும். அதாவது உங்களுக்கே தெரியும், நம் உடம்பில் எந்த மிஸ்டேக்கும் இல்லை என்று. பின் ஏன் ஐயா படம் எடுக்கப் போனீர்கள்?

"டாக்டர் சொன்னாரே!"

எக்ஸ்ரே நிறுவனத்துடன் உள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில், எக்ஸ்ரே படமெடுக்க நோயாளிகளை அனுப்பி வைக்க டாக்டர்களுக்குக் கமிஷன்.

'எக்ஸ்ரே' எடுக்க வேண்டும் என்று சொன்னவுடனே, நம் உடம்பில் என்னவோ எதோ என்று படித்தவனுக்கும் சரி, பாமரனுக்கும் சரி பயம் தோன்றுவது இயற்கை. டாக்டர் சொல்கிறார், செய்யாமல் இருக்க முடியாதே!

நம் பயத்தையும், பலவீனத்தையும் பயன்படுத்தி, இப்படி சேர்க்கும் பணத்தை யார் கண்டுபிடித்துக் கேட்பது? இது பகல் கொள்ளை இல்லையென்றால் யார் நம்புவது?

எக்ஸ்ரே, இ.சி.ஜி. ரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை என்று வகை வகையாய் சீட்டுக்கொடுத்து அனுப்பி, நோயாளிகளிடமிருந்து பலவகைகளில் பணம் பிடுங்குகிறார்கள். இவற்றில் நூற்றுக்கு பத்து கேஸ்கள் தான் உண்மையானவை.

படித்தவனுக்கு இது புரிகிறது. பாமரனுக்கு? கொள்ளைகள் தொடருகின்றன. சமீபத்தில் முன்னூறு ரூபாய் தண்டமாய் இழந்தபின்பு தான் எனக்கே சுரணைவந்தது. எங்கு போய் சொல்வது இக்கொடுமையை?

—கே, தீபன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பொதுவுடமைப் புரட்சிகள் உற்பத்தி உறவுகளை எந்த வகையில் மாற்றியுள்ளன – வேலைப்பாடு (Division of labour) எப்படி இருக்கிறது – முலதனம் என்ன ஆகியிருக்கிறது – இதற்கான பதில்கள் தட்டிக்கழிப்பதாகவே உள்ளன.

போலீஸ், இராணுவம் இவற்றின் தன்மையில், முதலாளித்துவ நாட்டிற்கும் பொதுவுடமை அமைப்பிற்கு மிடையே வேறுபாடு இல்லை. முதலாளித்துவ நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள், ஊழல், அதிகாரக் கொடுமைகள் பொதுவுடமை நாட்டில் உருமாறியிருக்கின்றன. உள்ளடக்கம் மாறவில்லை.

மிகச்சுருக்கமாகச் சொன்னால் முதலாளித்துவ நாடுகளில் நடைபெற வேண்டிய புரட்சிகளை அடுத்து, மீண்டும் ஒரு புரட்சி பொதுவுடமை நாடுகளில் நடைபெறுவது தவிர்க்க முடியாதது. ஒருவேளை இது படிப்படியான சீர்திருத்தங்களின் தொகுப்பாக அமைந்து விடலாம்.

பொதுவுடமையின் பெயரால் குழு ஆட்சியினரின் தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிப்பது மார்க்சீயத்துவ வளர்ச்சியின் ஒரு முக்கிய கட்டமாகும்.

ஆனால், இந்தக் குறைகளை மார்க்சீயத்தின் குற்றமாக்கி விலகி ஓடிப்போய் விட்டனர், ஒரு பகுதியினர். அதே குறைகளை மார்க்சீயத்துவத்தின் தவிர்க்க முடியாத அங்கம் என கொச்சைப்படுத்தி வக்காலத்து வாங்கினர் மற்றவர்கள்.

இந்த இரு பிரிவினரும், இவ்வகையில் செய்யப்பட்ட முயற்சிகள் எங்கும் இயக்கமாக இல்லாமல் போனதும், தத்துவ வறட்சியின் முன்றாவது மைல் கல்லாகும்

போராட்டங்களின் போர்த்தந்திரங்கள் :

சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க அரசை அமைக்க மட்டும் புரட்சி நடந்துவிடவில்லை. ஜாரின் சர்வாதிகாரம் என்ற திட்டவட்டமான அரசியல் அடிமைத்தனத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் மார்க்சீயம் பங்கேற்றது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியம் அது போல் செல்வாக்கு பெற்றபோதும் விடுதலைக்குப்பின் அரசியல், பொருளாதார ஆட்சிமுறை அமைப்பில் இடம் பெறவில்லை. இதுவே இரண்டுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு.

உலகெங்குமே இதுவரை பொதுவுடமை அரசாங்கம் அமைந்தநாடுகளில் எல்லாம் சர்வாதிகாரத்தையோ, அந்நிய ஆதிக்கத்தையோ எதிர்த்து தான் அம்மாற்றம் நிகழ்ந்து உள்ளது. மாறாக, மக்களாட்சி முறை வேரூன்றிய எந்த நாட்டிலும் பொதுவுடமை அரசாங்கம் அமையவில்லை.

'எங்கிருந்து தொடங்குவது' என்ற மிகப் பழைய கேள்வியை புதிய முயற்சியாளர்கள் கேட்டுக் கொள்கிறார் கள். 'இந்தியா அரை நிலபிரபுத்துவ காலனி நாடு எனவே, நில உடமையாளர்-விவசாயிகள் முரண்பாட்டி-லிருந்து ஆரம்பிக்கவேண்டும்' என்பது சிலரின் பதிலாக இருக்கிறது.

'அரை நிலப்பிரபுத்துவ காலனி' எனும்போது மீதி இருக்கின்ற அரைப் பகுதியில் இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. யூதர்களுக்கும்-ஜெர்மானியருக்கும் இருந்ததுகூட முரண்பாடுதான். இவர் கள் இட்லர் காலத்தில் ஜெர்மனியில் இருந்திருந்தால் அங்கிருந்து தான் ஆரம்பித்து இருப்பார்கள் போலிருக்கிறது.

எனவே எந்த முரண்பாட்டிலிருந்து ஆரம்பிப்பது என்ப தல்ல. எங்கெல்லாம் ஆக்க பூர்வமான பிரச்சினைகள் உள்ளனவோ அங்கெல்லாம் ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆனால் எப்படி ஆரம்பிப்பது என்பது தான் பிரச்சினை. ஆயுதங்களின் பங்குபற்றி அடிக்கடி பேசப்படுகிறது. குழந்தை உயிரோடு பிறக்குமா என்று தெரியுமுன்னர் பெயர்சூட்ட அடித்துக் கொள்வது போன்றது இது.

—தொடரும்

வாசகர் குழுவுக்கு எழுதுவோர் முழு முகவரி குறிப்பிட வேண்டும்
வாசகர் குழுவுக்கு, உரியவர்கள் கடவடிக்கை எடுக்க முற்படும் போது, பின் வாங்காது ஒத்துழைப்பு தரும் துணிவுடையவர்களே, நங்கள் குழுவுக்கு அனுப்பக் கோருகிறோம். கட்டுரையின் பக்கத்திற் கேற்ப சுருக்கமாக வரும் குழுவுக்களையே வெளியிட முடிகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

எந்த ஐயத்திற்கும் பதில்

கட்டி பதிலளித்த சில கேள்விகள்?

* நான் எந்த மதத்தையும், சாதியையும் சாராமல் இருக்க முடியுமா? சட்டப் பூர்வமான விளக்கம் சொல்லுங்கள்
* பியர்லஸ்லில் பணம் கட்டுவது பாதுகாப்பானதா?
* 2 ஆண்டுகளாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்க்க வழி சொல்லுங்கள்.
* SITUATIONAL ENGLISH—by Longman — இப்புத்தகம் எங்கு கிடைக்கும்?
* தூக்கத்தில் தினம் விந்து வெளிப்படுகிறது. இது ஆபத்தானதா?
* நான் ஒரு தொழுநோயாளியைத் தொட்டேன். தீங்கு நேருமா?
* புதிய வாகன ஓட்டி தொடங்கும் வழி முறைகள் என்ன?
* வெளிநாட்டிலிருந்து ஒர் இயந்திரம் தருவிக்க வேண்டும். அதன் வழிமுறைகள் பற்றி விளக்கம் தாருங்கள்.

இது போல உங்கள் ஐயம் எதைப்பற்றியாயினும் இரண்டே ரூபாய் செலவில், பதில் பெறுங்கள். அந்தத்துறை நிபுணர்களிடமிருந்து பதில் பெற்று உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம்

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள்.

"கட்டி பதிலாளர்குழு" 1494, அண்ணாநகர், சென்னை-600 040.

இந்தியாவில் கறுப்புப் பணம்

இந்தியாவில் உள்ள கறுப்புப்பணம் அளவு எவ்வளவு? அனைத்துலக நிதிக்குழு (International monitary Fund) அலுவலர் குறிப்பின்படி, உலக நாடுகளிலேயே இந்தியா கறுப்புபணத்தில் முதலிடம் வகிக்கிறது. மொத்த தேசிய வருவாயில் (1978-79) 48% கறுப்புப்பண வருவாய் தான். இது அமெரிக்கக் கறுப்புப்பண புழக்கத்தைவிட 2 மடங்கிற்கு மேல் அதிகமே. பிறநாடுகளில் கறுப்புபணம்:-(தேசிய வருவாய் %)

ஆய்தீரேலியா	11%	இத்தாலி	20%
கனடா	20%	ஜப்பான்	2.5%
பிரான்ஸ்	9%	இங்கிலாந்து	6.5%
மே. ஜெர்மனி	8%	அமெரிக்கா	22%
இந்தியா	48%	சோவியத்	10%

இந்தியாவில் கறுப்புப்பணம் நாளுக்கு நாள் பெருகுவதாகவும் கடந்த 10 ஆண்டுகளில் 2 மடங்காகியுள்ளதாகவும் தெரிகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஏழை மாநிலத்தின் வசதியான முதலமைச்சர்

மக்களுக்கு உழைப்பதாகப் பதவிப்பிரமாணம் எடுத்து ஆட்சியில் அமர்ந்த மத்தியப் பிரதேச முதலமைச்சர் அர்ஜுன் சிங் சென்ற வருடம் விமானத்தில் பயணம் செய்வதில் பழைய சாதனைகளெயெல்லாம் முறியடித்து இருக்கும் விஷயம் வெளியே வந்துள்ளது.

ஏற்கனவே இரண்டு பெரிய விமானங்களும் இரண்டு ஹெலிகாப்டர்களும் மாநில அரசுக்கு சொந்தமாக இருந்தும் இவரின் பிரயாண வேகத்துக்கு ஈடு கொடுக்கும் சக்தி அவற்றுக்கு இல்லை என்று நினைத்து மணிக்கு 335கி.மீ வேகத்தில் செல்லக் கூடிய 11 இருக்கை வசதிகள் உள்ள விமானம் ஒன்றை ரூ 2½ கோடி விலையில் (மக்களின் வரிப் பணம் தான்!) வாங்கியிருக்கிறார்.

ஏப்ரல் 83' முதல் ஜனவரி 84'க்குள் மாநிலத்தில் இவர் கால் படாத கிராமமே இல்லையாம். மற்றபடி டெல்லி, பம்பாய், ஹைதராபாத் போன்ற பெரிய நகரங்களுக்கு நடத்திய பிரயாணங்கள் தனி. எல்லாமே ஆகாய வெளிப் பயணம் தான்.

இந்த 306 நாட்களில் 335 முறை விமானத்தில் பயணம் செய்திருக்கிறார்.

சராசரியாக இவருக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு ரூ13,000 வீதம் ஆகாயப் பயணத்திற்கென்று மாநில அரசு செலவு செய்திருக்கிறது.

ஆகாயத்துறை பயண வசதிகளுக்கென்று தனித்துறை ஒன்றை ஏற்படுத்தி அதற்கென்று பட்ஜெட்டில் ரூ 48 லட்சம் ஒதுக்கியிருப்பது இவரது சாதனைகளில் அடக்கம்.

இந்தியாவிலேயே மிகவும் ஏழ்மையான, பிற்படுத்தப் பட்ட மாநிலம் மத்தியப்பிரதேசம் தான். 60 சத மக்களுக்கு மேல் வறுமைக் கோட்டுக்கு கீழே இருந்து ஒரு வேளை சோற்றுக்கே போராடும் நிலையில் வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றனர். இதில் வெட்கக் கேடான விஷயம் என்ன வென்றால் இந்த சாதனை விபரங்களை முதல்வரே சட்ட மன்றக் கூட்டத்தின் போது தெரிவிப்பது தான்.

—எப். வில்லியம் ஆண்ட்ரூஸ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

அபிராமி பப்ளிகேஷனின் அருமையான நூல்கள்

1.	சரும நோயிற்கான மருத்துவம்	4-00
2	உணவு முறையால் நீரும் நோய்கள்	4-25
3.	பலவிதப் பிணிகளுக்கு பயன் தரும் மருத்துவம்	5-50
4.	பிணி தீர்க்கும் மூலிகைகளும் தாவரங்களும்	9-00
5.	தமிழ் வைத்திய மருத்துவக் களஞ்சியம்	10-00
6.	மனதில் மறைந்துள்ள அற்புத சக்திகள்	10-00
7.	அழகும் ஆரோக்கியமும் வேண்டுமா?	11-00
8.	நோய் அறிதல் (TEXT BOOK OF MEDICINE IN TAMIL)	27-00

அபிராமி பப்ளிகேஷன்ஸ்

307, விங்கி செட்டி தெரு, சென்னை-6 00 001



ஆறே மாதங்களில் ஆங்கிலம் கற்க ஓர் எளிய வழி!

ஒரு சிறு தொகையை முதல் இன்றைத்தில் இருந்து கொண்டே மிகச் சுலபமான முறையில் ஆறே மாதங்களில் B A பட்டதாரிகளுக்கு நிகரான ஆங்கில அறிவை பெறலாம்.

1. "தமிழில் ஆங்கில ஆசிரியர்" விலை ரூ 20/-. தபால் செலவு ரூ 4 -தனி
2. "தமிழில் ஆங்கில உரையாடல் நூல்" விலை ரூ 15 - தபால் செலவு ரூ 4 -தனி
3. "ஆரம்ப ஆங்கில இலக்கணம்" விலை ரூ 6/-. தபால் செலவு ரூ 3 -தனி
4. "ஈ சீஸ்ர் லெட்டர் ரைட்டர்" விலை ரூ 8/- தபால் செலவு ரூ 4 -தனி

தேவையான புத்தகத்தின் பெயரை குறிப்பிட்டு ரூ 5 . M O செய்யவும்

C. C. புக் டிப்போ (S)

No. 6, ராஜேந்திரன் காலனி அருணாசலம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 093
PHONE 423990

FREE E- BOOKS , www.thamizham.net.,

அனந்தனும் அடியாரும்

பதவி கிடைக்கவில்லை என்பதற்காக புதுக்கட்சிகளை ஆரம்பித்துக்கொண்டிருப்பவர்களின் வரிசையில் அடியாரும் அனந்தனும் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர். இதில் அடியார் கொச்சையான வார்த்தைகளுடன்கூடிய வாய்ச்சவடால்களை பேசிப்பேசி முன்னுக்கு வந்தவர். இவருக்கு எவரையுமே சாதாரணமாகவே விமர்சிக்கத் தெரியாது. புகழ்ந்தால் உச்சியில் வைத்துக்கொண்டு புகழுவார். இகழ்ந்தாலோ இவரைக்காட்டிலும் தரம் தாழ்ந்த முறையில ஒருவராலும் பத்திரிகையில் எழுதமுடியாது. அபரிமிதமான அரசு விளம்பரங்களால் நீரோட்டம் செழித்துக்கொண்டிருந்த போது ஜெயலலிதாவிற்கு சிந்தனைச்செல்வி என்று பட்டம் கூட்டி தினந்தோறும் புகழ்ந்து வந்த இவர், அ.தி.மு.க.விலிருந்து வெளியேறியவுடன் ஜெயலலிதாவை வசந்த சேனை என்று இகழ்கிறார். முன்பு கருணாநிதியை மு.க. என்பதற்கு பதிலாக 'மூக்கா' என்றே குறிப்பிடும் வழக்கம் உள்ள இவர், இப்பொழுதோ கலைஞர் என்றே குறிப்பிடுகிறார். அண்ணா கழகத்தை ஆரம்பித்த போது எம்ஜி.ஆரை எப்படித்திட்டுகிறார் என்பதைப்பார்ப்பதற்காக இவருடைய கூட்டங்களில் கழகவினரே பார்வையாளராக வந்து குவிந்தனர். இலங்கை கலவரத்தின் போது அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் அடித்த ஸ்டண்ட்டில் காணாமல் போய்விட்ட அடியாரை பிறகு எவருமே கண்டுகொள்ளவில்லை.

அடியாரைப் போலவே பதவி கிடைக்கவில்லை என்பதற்காக ஜனதாவைவிட்டு இரண்டு முறை வெளியேறிய சுயநலத் தமிழன்தான் குமரி அனந்தன். தன்னைப் பற்றிய திடமான தொலைநோக்கு இல்லாத இவரிடம் தேசத்தைப் பற்றியதான தொலைநோக்கு எங்கே இருக்கப்போகிறது?

தேச நலனையோ மக்கள் நலனையோ பற்றி சிறிதும் அக்கறை கொள்ளாமல் தங்கள் சுயநலத்திற்காக அரசியலில் ஈடுபட்டு இந்திய அரசியலைச் சாக்கடையாக்கிக் கொண்டிருக்கும் இவர்களை மட்டுமல்லாமல் இவர்களைப் போன்ற பிற சுயநலவாதிகளையும் மக்கள் புறக்கணித்தால் நம் தேசம் உருப்படும்.

—ஜி. மாதவராஜன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

திரையுலகப் பிரமுகர்கள்:

இயக்குநர் பீம்சிங் 2

[இதுவரை படிக்காதவர்களும் தொடர்ந்து படிக்கலாம்]

இயக்குநர் பீம்சிங்கை நாம் புரிந்து கொள்ள, முதலில் அவரது சினிமா நுழைவு பற்றியும், இயக்குநராக வெற்றி பெற்ற சூழல் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும்.

ராஜஸ்தான் மாநிலத்து ஜோத்பூரில் பிறந்தவர் பீம்சிங். இவரது தந்தை ஆந்திராவில் குடியேறி தெலுங்கு பெண்ணை மணந்தார். பீம்சிங்கின் தாய்மொழி தெலுங்கு. பள்ளி வாழ்வில் பீம்சிங் கதை எழுதல், நாடகம் அமைத்தல், நடனமாடுதல் இவற்றில் அதிக ஆர்வம் காட்டினார். 1921இல் தனது பீக இளமையில், சென்னை ஒட்டேரியில் அவர் பார்த்த முதல் மௌனப்படம் அவரை வசீகரித்து விட்டது. அதுமுதல் பெரியவனானால் சினிமா தான் வாழ்க்கை என்று முடிவு கட்டி விட்டார்.

மனம் சினிமாவையே நாடினாலும், "ஆந்திர பிரபா" என்ற தெலுங்கு இதழின் பிழைதிருத்துபவராகவே அவர் தன் வாழ்க்கையைத் தொடங்க முடிந்தது. இடையில் அவரது சினிமா ஆசையும், சினிமா அறிவும், இவரது நண்பரான திரு. கிருஷ்ணன் (பஞ்சு) மூலம் செழித்து வளர்ந்தது "பூப்பாவை" என்ற படத்தை டைரக்ட் செய்ய திருவாளர் கள் கிருஷ்ணன், பஞ்சு சென்னை வந்தபோது, பீம்சிங் அவர்களிடம் உதவி டைரக்டராகவும், உதவி எடிட்டராகவும் 1942இல் அமர்ந்தார். (கிருஷ்ணன் பின்பு மைத்துனரும் ஆனார்) இதன் தொடர்பாக என். எஸ். கிருஷ்ணன், ஏ. எல். எஸ். ஆகியோருடன் கிடைத்த அனுபவம் இவரை வடிவமைத்தது.

சுமார் 11 ஆண்டுகால, திரையுலக அனுபவங்களுக்குப் பின்னர் முதன்முதலாக 15-7-53 தான் "செந்தாமரை" என்ற படத்தை தானே இயக்கும் பொறுப்பு திரு. ஏ. எல். எஸ் ஆல் தரப்பட்டது. ஆனால் இப்படம் 14-9-62இல் தான் வெளி வந்தது. இதனையடுத்து திரு. மு. கருணாநிதி கதை வசனம் எழுதிய "அம்மையப்பன்" படத்தை 47 நாட்களிலே இயக்கி னார். தன்னை இப்படம் நிலைநிறுத்தும் என பீம்சிங் எதிர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பார்த்துக் கொண்டிருந்த போது. மாடர்ன் தியேட்டர்சார் "சுகம், எங்கே?" என்ற படத்தை—இதே கதையமைப்பு கொண்ட படத்தை—சில நாட்கள் முன்பாக வெளியிட்டார்கள் "பீம்சிங்" ஆசையில் மண் விழுந்தது. அம்மையப்பன் படுத்தது! 3வது டைரக்ஷன் வாய்ப்பு



ராஜா ராணி. மு.கவின் வசனம், கனல் தெறித்தது. இப்படம் தணிக்கைக்கு உட்படுத்தப் பட்டபோது நிறைய சேதமானது. விளைவு பீம்சிங்கின் 3வது படமும் வீழ்ந்தது.

வரிசையாக 3 தோல்விப்படங்களை இயக்கிய டைரக்டர் தான் பீம்சிங். இந்தத் தொடர் தோல்விகள் இவரை சினிமா உலகை விட்டு விரட்டியடிப்பதற்குப் பதிலாக அவரது எதிர்கால படங்களின் வியாபார வெற்றிக்கு உரமானது.

பீம்சிங் தனது 4-வது படத்தை மூவருடன் சேர்ந்து தானே தயாரித்தார். 21,000 அடிகள் நீண்ட சமூகப்படமாக தயாரித்தார்; மக்களுக்கு நிறைய கதையை ஊட்டினார். இதில் பீம்சிங் வெற்றி பெற்றார். படம் பதிபக்தி. 100 நாட்கள் ஓடியது.

இந்தப் படத்திலிருந்து தான் பீம்சிங் தனது பார்முலா வை வகுத்துக் கொண்டார். தியூட்டோன் ஸ்டூடியோ தொழிலாளியாக இருந்த பீம்சிங், அந்த ஸ்டூடியோவையே வாங்குமளவுக்கு இந்த பார்முலா படங்கள் தான் அவருக்கு காசு சேர்த்துக் கொடுத்தன. எப்படி?

மனிதனின் அடிப்படை உணர்வுகளில் குடும்ப உணர்வும் ஆழமானது. அதனைத் தூக்கி நிறுத்தும் போது சாதி, மத இன உணர்வுகள் மாதிரி, குடும்ப உணர்வும் ஆவேசமாக தொற்றிக் கொள்ளும்; மனதை ஆக்ரமிக்கும்.

இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டே பீம்சிங் பதிபக்தியினைத் தொடர்ந்து, குடும்ப உணர்வுகளை மேலிட

FREE E- BOOKS , www.thamizham.net.,

செய்யும் கதைகளைப் படமாக்கி வெற்றி கண்டார். அந்த முறையில் பிளவுபட்டக் குடும்பம் விளைவிக்கும் பிரச்சனைகளைச் சொன்ன பாகப்பிரிவினை படம் அடுத்து வெள்ளி விழா கொண்டாடியது. பீம்சிங் வெற்றி கரமான டைரக்டர் என்ற பெயரை இப்படம் ஏற்படுத்திக் கொடுத்தது.

இதனைத் தொடர்ந்து வந்தவை தான் பிரபலமான 'ப' வரிசைப் படங்கள். பல தோல்விகளுக்குப் பிறகு பதிபக்தியும், பாகப்பிரிவினையும் வெற்றி பெற்றதால், அடுத்து வந்த பல படங்களுக்கு 'ப' கரத்தில் பெயர் வைத்தால் வெற்றியாகும் என்று நம்பிக்கை வைத்தார் பீம்சிங். அவரது 34 படங்களில் 18 படங்களுக்கு இப்படி பெயர் வைத்தும் பந்தபாசம், பாலாடை, பழநி, பாதுகாப்பு, பாத பூஜை போன்ற 'ப' வரிசைப் படங்கள் தோல்வியுற்றன. எழுத்தில் ஒன்றுமில்லை என்பதை பீம்சிங் தன் கடைசி காலத்தில் உணர்ந்திருக்கக் கூடும்.

பீம்சிங் எடுத்த குடும்ப உணர்வு படங்கள் வெற்றி பெற்றதற்கு சிவாஜிகணேசன் இவற்றில் நடித்ததும் முக்கிய காரணமாகும். அவரின் பாத்திர எதிர்பார்ப்பை விட சிறப்பாக சிவாஜி நடிப்பு மேலோங்கி நின்றிருக்கிறது.

பாசமலரில் "கைவீசம்மா கைவீசு" படப்படப்பில், அக்காட்சியை இயக்கிக் கொண்டிருந்த பீம்சிங்கே தன் பொறுப்பை மறந்து நெகிழ்ந்து போய் அழுதிருக்கிறார். இந்த அனுபவத்தை அவரே பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

பீம்சிங்கின் 34 தமிழ்ப்படங்களில் 16 படங்களில் (சுமார் 50%) சிவாஜியே கதாநாயகன். இதில் 8 படங்கள் 100 நாட்களைத் தாண்டி ஓடியிருக்கின்றன. சிவாஜி இல்லாமல் பீம்சிங் இயக்கி வெற்றி பெற்ற குடும்பக்கதைகள் மிகவும் குறைவு தான். கிட்டத்தட்ட இல்லையென்றே சொல்லலாம்.

பீம்சிங்கிற்கு 4 காலங்கள் உண்டு. அவை :
1) தொடக்க தோல்விக்காலம், (1954-58) 2) வெற்றி கரமான 'ப' வரிசைக்காலம் (1959-65) 3) அமுங்கியிருந்த காலம்(1966-76) 4) மாறுதலான கடைசி காலம் (1977-78).

இந்த காலங்களின் பீம்சிங் படங்கள் எதையெல்லாம் மக்களுக்கு, காலத்திற்கேற்ப உணர்த்தின எனப்பார்ப்போம்.

தொடரும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வீட்டு வேலைக்காரப் பெண்கள்

நகரத்தில் வீட்டு வேலைக் காரிகளுக்குக் கிராக்கி அதி கரித்து வருகிறது. எனவே எஜமானி அம்மாளின் ஏகபோக அதிகாரம் அவ்வளவாக செல்லுபடியாவதில்லை.

ஆனால் கிராமத்தில் வீட்டு வேலைக்காரிகளின் நிலைமாறு பட்டாதாகவும், பரிதாபகரமான தாகவும் இருக்கிறது. சம்பளம் மாதம் ரூ 6 முதல் ரூ 12வரை தான். இதற்காக காலை முதல் மாலை வரை துணி துவைப்பது, பாத்திரம் கழுவுவது முதல் குழந்தையின் ஆசன வாயைக் கழுவி விடுவது வரை ஒரு முழு நேர ஊழியரைப் போல நாள் முழுவதும் கசக்கி பிழிந்து வேலை வாங்கப்படுகின்றர். வீட்டுக்காரர் பண்ணையாராக இருந்து விட்டால் வயல் வேலைகளையும் தலையில் சுமத்தி விடுவார். பழைய சாதத்தையும், ஊசிப்போன குழம்பையும் இவர்களின் கண்ணில் காட்டுவார்கள். பண்டிகைக்கு மலிவான புடவை ஏதேனும் எடுத்துக் கொடுத்தால் மட்டுமே பெற்றுக் கொள்வார்கள். இவர்கள் பொய் பேசுவதில்லை. திருடுவதில்லை. இவர்களின் அறியாமையை திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ளும் பலர் ஐம்பதோ, நூறோ கொடுத்து விட்டு வட்டிக்கு வேலை செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்து நிரந்தர கொத்தடிமையாக்கி விடுகின்றனர். வருவாய்க்கு இவர்களுக்கு வேறு வழி வகை ஏதுமில்லை. வேலைக்காரிகள், பரம்பரை தொழிலைப் போல தங்களின் மகளையும் இளம் வயதிலேயே இதில் பழக்கப்படுத்தும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். விதவைகளும், சோம்பேறி கணவன்களைப் பெற்றவர் களுமே ஆதரிக்க ஆண் துணை இன்றியே இப்பணிக்கு வருகின்றனர்.

—சீ. இரகுராமன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

எங்கு சென்றாலும் சுலபமாய் வேலை கிடைக்கும்

S.S.L.C. படித்திருந்தால் கூடப்போதுமானது

ACCOUNTANCY

பயிலுக! கணக்கு எழுதும் முறை தெரிந்திருந்தால் யார் சிபாரிசும் தேவையில்லை! சுலபமாய் வேலை கிடைத்துவிடும். ஏனெனில், எங்குமே கணக்கர்கள் தேவையாயிருக்கிறது. எட்டே மாதப் படிப்பு தான். தபால் மூலம் பயிற்சியும் பெற்று அத்தாட்சியும் பெறலாம். மாதந்தோறும் ரூ 20 அனுப்பினாலே போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

'தங்கராஜ் கல்வி நிலையம்'

45, ஆற்காட் ரோடு, சென்னை-600 024.

S S L.C. & H.S.C. (+2)

(தமிழ்நாடு அரசு பொதுத் தேர்வுகள்)

வீட்டிலிருந்தே படித்து பாஸாகலாம்

16 வயது நிரம்பியவர்கள் 8வது தேறியிருந்தால் S. S. L. C. பிரைவேட்டாக எழுதலாம்.

18 வயது நிரம்பியவர்கள் 10வது (S.S.L.C) தேறியிருந்தால் H.S.C (+2) பிரைவேட்டாக எழுதலாம்.

பாடங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கின்றோம். பயிற்சிக் கட்டணம் மாதந்தோறும் M.O மூலம் அனுப்பினால் போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

தங்கராஜ் கல்வி நிலையம்

45, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600 024.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சுட்டி சந்தா விபரம்:

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும்: ஆசிரியர் குழு, சுட்டி, அண்ணாநகர், சென்னை-600 040.

சுட்டி முன் இதழ்கள்:

இதழ் எண்கள் 1 முதல் 7, 19, 21, 22 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

சுட்டி விற்பனையாளர்கள்

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள்; தரமான கமிஷன்; சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

சுட்டி இலவசம்:

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே! சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியைத்தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

சுட்டியில் விளம்பரம்

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பரிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள். நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 -மட்டுமே.

* மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியில் வெளி இடுவதற்கில்லை.

சுட்டி இம்மாதம் வந்து சேரவில்லையா?

ஒவ்வொரு மாதமும் முதல் தேதிக்குள் கிடைக்குமாறு சந்தாதாரர்களுக்கு சுட்டி அனுப்பப்படுகிறது. சந்தா முடிய ஒரு மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும் (உடன் பணவிடை தாளும் இணைக்கிறோம்) அஞ்சல் உறையின் மேல் உங்களுக்கு அறிவிப்புச் சீட்டு ஒட்டப்படுவதைக் கவனிக்க மறவாதீர்கள். அப்படியும் சந்தா அனுப்பாதோர்க்கே சுட்டியை நிறுத்த நேர்கிறது.

சந்தா முடிய காலமிருந்தும் 15 தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சலில் தவறுவது என்ன நடவடிகை எடுத்தும் தவிர்க்க முடியாதிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆசிரியர்: நிர்மலா சுந்தர். வெளியிடுபவர்: இராமச்சந்திரன், 194- வெள்ளாள நகர், சென்னை. 600 040.
அச்சிடுபவர்: இரா.எஸ். இராஜ் அரு, இதயா பிரிண்டர்ஸ், 96, சாமி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

தமிழ் மாத இதழ் 1, ஜூலை 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-5

http://www.thamizham.net FREE BOOKS (TAMIL)



Sakthi Sugars Limited

A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

FREE E-BOOKS , www.thamizham.net.,